# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 194/மா/2022**
**நாள் : 28.11.2022**

திரு. M. ரத்திஷ்குமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, வினாயகபுரம், எண்.45/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.ரத்திஷ் குமார் என்பவரின் 26.10.2022 நாளிட்ட மனு 31.10.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 194/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, வினாயகபுரம், எண்.45/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.ரத்திஷ் குமார் என்பவரின் முறையீட்டு மனுவில்,

“நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சட்டத்திற்கு விரோதமான பல்வேறு நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி அதற்கு எதிராக போராடி வருகிறேன். தற்பொழுது மண்டலம் 4 வார்டு 43, வீட்டு எண்.53, வினாயகபுரம் மெயின் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை – 81 உள்ள தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு மாடிகள் கொண்ட வீடு மாநகராட்சியின் உரிய அனுமதியின்றி கட்டப்பட்டதாகும். மேலும் தமிழ்நாடு குடிசை மாற்றி வாரியம் ஒதுக்கீடு செய்த அளவை விட அதிகப்படியாக மாநகராட்சிக்கு சொந்தமான இடம் மற்றும் கோயில் இடத்தில் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளனர். இதனால் வாகன போக்குவரத்து இடையூராக உள்ளது. இது இக்கட்டிடத்தை சுற்றியிருப்போருக்கு பெரிதும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே மாநகராட்சியின் உரிய அனுமதி இல்லாமல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய ஒதுக்கீடு அளவைவிட அதிகமாக ஆக்கிரமித்தும் ஆலயத்தின் பக்கத்தில் தரமில்லாமல் கட்டப்பட்டுள்ள இக்கட்டடம் மீதும் அதன் உரிமையாளர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடவேண்டும்” என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 16.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 7.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 16.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, வினாயகபுரம் மெயின் தெரு, கதவு எண்.53–ன் உரிமையாளர் P. பாலகிருஷ்ணன் என்பவருக்கு தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 400 சதுர அடியை விட சென்னை மாநகராட்சி மற்றும் CMDA முன் அனுமதி பெறாமல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 200 சதுர அடி சேர்த்து 600 சதுர அடிக்கு மூன்று அடுக்கு மாடி வீடு கட்டியுள்ளார். இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு புகார் மனு அளித்தும் இதுநாள் வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பை அகற்றிட வேண்டி மாநகராட்சிக்கு உரிய ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளர் 16.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்,**

"சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, வினாயகபுரம் மெயின் தெரு, கதவு எண்.53–ன் உரிமையாளர் P. பாலகிருஷ்ணன் என்பவருக்கு தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 400 சதுர அடிக்கு கூடுதலாக சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 200 சதுர அடியும் சேர்த்து 600 சதுர அடிக்கு இரண்டு அடுக்கு மாடி வீடு கட்டியுள்ள புகார் குறித்து வீட்டின் உரிமையாளர் திரு. P. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு 11.12.2021 அன்று Stop work Notice / Calling for approved plan under Section 56 & 57 of Town and Country Planning Act-1971-ன் படி நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதன் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள படிக்கட்டுக்களை அகற்ற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர், தண்டையார்பேட்டை, வினாயகபுரம், கதவு எண்.53ல் வசிக்கும் திரு. பாலகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 200 சதுர அடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

திரு. பாலகிருஷ்ணன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 200 சதுர அடி இடத்தை ஆக்கிரமித்து, 600 சதுர அடிக்கு வீடு கட்டியுள்ளார் எனவும், மேலும், திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு Stop Work Notice / Calling for approval Plan U/s 56 and 57 of Town and Country Planning Act 1971 ன்படி 11.12.2021 அன்று Notice பெருநகர

சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது எனவும், மண்டலம்- 4ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 4ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 8 (1)ன் படி இம்முறைமன்றத்தின் அதிகார வரம்பினை பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

8. (1) The Ombudsman shall, for the purpose of any enquiry, have all the powers of **a civil court trying a suit** under the Code of Civil Procedure, 1908 and in particular in respect of the following matters, namely:-

(a) summoning and enforcing the attendance of complainant or witnesses and examining him/her on oath;
(b) requiring the discovery and production of any relevant and necessary document.
(c) receiving evidence on affidavits;
(d) requisitioning any public record or copy thereof from any court or and
(f) any other matter which may be prescribed.

இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்றம் என்ற அந்தஸ்த்தை மேற்கண்ட சட்டம் கொடுத்துள்ள நிலையில், எதிர்மனுதாரராக ஒரு பொறுப்பான அதிகாரி, இம்முறைமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் (Deposition) அளிக்க வராமல், புகார் மனு குறித்து எந்தவித தெளிவான காரணங்களை அளிக்க இயலாத, கடை நிலை அதிகாரியான இளநிலை பொறியாளரை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிய செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும் மற்றும் இம்முறைமன்றத்தின் மாண்பை குறைக்கும் செயலாக இம்முறைமன்றம் கருதுகிறது. இதனை ஏற்க இயலாது. மேலும், மனுதாரரால் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு குறித்து 11.12.2021 அன்று Notice கொடுத்து அதன்பிறகு ஒரு வருடத்திற்கும் மேலாக, விசாரணை நாள் வரை, Lock and Seal மற்றும் Demolition Notice போன்ற எந்தவித சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுக்காத நிலையில் முன்னாள் மற்றும் தற்போதைய மண்டல அலுவலர்கள் (ம) சம்பந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி அவர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், மண்டலம்-4, வார்டு – 43, வினாயகபுரம் மெயின் ரோடு, கதவு எண்.53ல் வசிக்கும் திரு. P. பாலகிருஷ்ணன் அவர்கள் மாநகராட்சிக்கு சொந்தமான 200 ச.அடியை ஆக்கிரமித்து கட்டியுள்ளளாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலையிலும், நில அளவையர் (surveyor) கொண்டு அவ்விடத்தை அளந்து, அவ்வாறு ஆக்கிரமிப்பு இருக்கும் பட்சத்தில், அதனை அகற்ற உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

**The indifference of the Assistant Commissioner and field officials concerned in this case is censured by this Forum. This kind of apathy, negligence and lack of devotion to duties is the main cause for such illegalities of encroachments on the Government space, planning permission violation and cancerous indiscipline. Unless the Greater Chennai Corporation Commissioner**

**initiates strict remedial measures, the state of affairs may still deteriorate in the Zone.**

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. M. ரத்திஷ் குமார்,
   எண்.45/15, வினாயகபுரம் மெயின் தெரு,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
5. துணை ஆணையர்,
   மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
   *He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032